**தலைப்பு 226 – குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூலை 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுவதாகத் தெரிவிக்க முடியவில்லை. அதன் காரணமாக, நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரையும் இவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கை அரச நிதித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறு அறிக்கையிடப்படாத ரூபா 11,557,017 பொறுப்புகள் 2019 ஆம் ஆண்டின்போது தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கையின்றி இருந்தன. | 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதிய 266/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.11 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடப்பட வேண்டும். | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட பொறுப்புகள் உள்ளடக்கப்பட்டன. அரச நிதித் திணைக்களத்திற்கு கடப்பாடு, பொறுப்பு என்பன தொடர்பாக அறிக்கை வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) | நிதிசாரா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்ட ரூபா 1,922,166,505 பெறுமதியுடைய சொத்துக்கள் தொடர்பாகத் திருப்தியடைய முடியவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 8 ஆம் இலக்க பொது அறிவித்தலின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும். | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 8 ஆம் இலக்க பொது அறிவித்தலின் 8.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சிகாஸ் கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட BOSS அறிக்கையின் பிரதி ஒன்று கணக்காய்வு நடவடிக்கைகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிசாரா சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் 02 செலவின விடயங்களது சொத்துக்களுக்கான பெறுமதி ரூபா 40,746,779 ஆகும். கொள்வனவு விபரங்களுக்கமைய அது ரூபா 40,868,619 ஆகவிருந்தது. அதற்கமைய, கொள்வனவுப் பெறுமதியில் ரூபா 121,840 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதி நிலைமைக் கூற்றில் பிழையற்ற சொத்துப் பெறுமதியைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வேறுபாட்டுக்கான காரணம், எழுதுகருவி வகைப் பொருட்களும் அலுவலக உபகரணங்களும் (1201) மற்றும் 2001 செலவின விடயத்தில் கணக்கிலிடப்பட வேண்டிய சில விடயங்கள் தவறுதலாக மேற் குறித்த செலவின விடயத்தில் கணக்கிலிடப்பட்டமையே. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருக்க குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | இரு வாகனங்களை விற்பனை செய்தமையால் பெறப்பட்ட தொகை ரூபா 1,512,000 ஆகும். அதன் கைதவிர்ப்பு பெறுமதி ரூபா 1,807,456 ஆகக் காட்டப்பட்டதால் ரூபா 295,456 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதி நிலைமைக் கூற்றில் பிழையற்ற சொத்துப் பெறுமதி கணக்கிலிடப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகன விற்பனையால் பெறப்பட்ட உள்ளவாறான தொகை ரூபா 1,512,000 என ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தவறுதலாக பிறிதொரு கைதவிர்ப்பு வருமானமாகிய ரூபா 295,456.00 தொகையும் அதில் உள்ளடக்கப்பட்டு வாகனக் கைதவிர்ப்பாக காட்டப்பட்டுள்ளது. தேவையான திருத்தஞ் செய்யப்பட்டு எதிர்வரும் ஆண்டில் முன்கொண்டுவரப்படவுள்ள மீதி தவறின்றிக் கணிப்பிடப்படுவதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | 2015 ஆம் ஆண்டில் ரூபா 7,400,000 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று 2016 ஆம் ஆண்டில் பூரண நட்டத்தின் (விபத்துக்குள்ளாகியமையால்) கீழ் காட்டப்பட்டிருந்தது. எனினும், அது 2017 ஆம் | நிதி நிலைமைக் கூற்றில் பிழையற்ற சொத்துப் பெறுமதி கணக்கிலிடப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த வாகனம் பரிசீலனையின் பொருட்டு பூரண இழப்பீட்டை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்க முடியாதுள்ளது என அறிவித்துள்ளதுடன், இது தொடர்பா மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினது |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிலும் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிலும் அதனைப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | அபிப்பிராயமாவது பூரண இழப்பீட்டைப் பெறலாம் என்பதே. எவ்வாறாயினும், இந்த வாகனம் பூரண இழப்பாகக் காட்டப்பட்ட போதும், அது தொடர்பான மதிப்பீடு சர்ச்சைக்குரியதாகியதால் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவது தொடர்பாக மேலும் தீர்மானிக்கப்படாதுள்ளது. |
| (ஈ) | நிதிசாரா சொத்துக் கூற்றின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்து மீதிகள் மற்றும் திணைக்களம் சமர்ப்பித்த சொத்துப் பதிவேட்டு மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 305,415,325 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதி நிலைமைக் கூற்றில் பிழையற்ற சொத்துப் பெறுமதி கணக்கிலிடப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் நடைமுறை அல்லாத அசைவு அறிக்கையில் நடைபெறும் வேலையாகக் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 53,944,676.33 சரியானது அல்ல. அது ரூபா 41,516,944 ஆக இருத்தல் வேண்டும். நிதிக்கூற்றுக்களது தயாரிப்பின்போது 9153 காணியினது மீதியாகிய ரூபா 86,945,000 மீதி சரியானது அல்ல எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கணனி மயப்படுத்தலின் போது ஏற்பட்ட வழுவின் காரணமாக இவ்வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. நிறுவனம் சமர்ப்பித்திருந்த சொத்துப் பதிவேட்டில் ரூபா 66,945,000.00 மீதி சரியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக கணக்கிணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரு ஆண்டுகளைக் கடந்த 6 உத்தியோகத்தர்களது கடன் நிலுவை மீதியாகிய ரூபா 266,426 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | கடன் நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 1.6.4 ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணாமை

திணைக்களத்தினால் கீழ் வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதிப்பிரமாணம் 502(2) இன் 11 ஆம் அனுபந்தத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப் படவில்லை. | பிரமாணத்தின்படி நிலையான சொத்துப் பதிவேடானது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்துடன் பேணப்பட வேண்டும். | தற்சமயம் பிழையின்றிப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புகளுக்கான பதிவேடு பேணப்படவில்லை. | பிரமாணத்தின்படி அதற்கான மாதிரிப் படிவத்தில் இழப்புகளுக்கான பதிவேடு பேணப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (இ) நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புகள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப் படவில்லை. | பிரமாணத்தின்படி பொறுப்புகள் நாளாந்தம் பரிசீலிக்கப்படும் விதத்தில் பொறுப்புப் பதிவேட்டில் அப்பொறுப்புகள் குறித்துக் கொள்ளப்பட வேண்டும். | பெறுவனவுகள் தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாக்கிப் பேணுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரியப்படுத்துகின்றேன். |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனசாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| நிதிப் பிரமாணம் 571 | பொது வைப்புக் கணக்குகள் 02 இல் 02 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கும் ரூபா 5,927,512 சம்பந்தமாக | பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க | பாதுகாப்பு வைப்பாகிய ரூபா 75,000 புதுப்பிக்கப்படுவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரமாணத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வேண்டும். | ம் ஒப்பந்த வைப்பாகிய ரூபா 5,852,513 தொடர்பாக குறித்த வேலை பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்படுவதை யடுத்து அத்தொகையை ஒப்பந்தகாரருக்கு வழங்குவதற்கோ அல்லது அரச நிதியில் செலவு வைப்பதற்கோ அறிவுறுத்துரை வழங்கப்பட்டது. |
| (ஆ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை<br>------------------------- | | | |
| | 12 ஆம் பந்தி | ஒவ்வொரு ஆண்டிலும் கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய வாகனங்களை இனங்கண்டு அத்தகவல்களைக் குறித்த ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னரும், கைதவிர்ப்பு முடிவடைவதையடுத்து 2 வாகனங்களதும் தகவல்கள் குறித்த ஆண்டின் யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் முறையே மாதிரிப் படிவம் 01 மற்றும் மாதிரிப் படிவம் 02 என்பவற்றில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அறிவுறுத்துரைப்படி குறித்த நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாதிரிப் படிவம் 02 இரு வாரங்களுக்குள் அனுப்பப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கை -------------------------- | | | |
| | 2.2 ஆம் பந்தி | தொகுதி இலக்கம் 11 இன் கீழ் வாகனக் கொள்வனவின் போது கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டமையும் 5 வாகனங்களுக்கான தேவை திணைக்களத்தால் இனங்காணப்பட்டுள்ளமையும் உறுதி செய்யப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஈ) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை - 2006 ------------------------ | | | |
| (i) | 4.2.1(ஆ) பிரிவு | பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளுக்கான பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் நிரல்படுத்தப்பட வேண்டுமாயினும், திணைக்களத்தின் பிரகாரம் பொருட் கொள்வனவுத் திட்டமானது மீளாய்வாண்டிற்கு மாத்திரமே கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ii) | 4.1.1(அ) பிரிவு | பொருட் கொள்வனவு வழிகாட்டியிலிருந்து விலகியவாறு 69 கடவுச்சீட்டு இயந்திரங்கள் ரூபா 16,138,728 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (iii) | 5.3.13 மற்றும் 5.4.10 (ஆ) பிரிவுகள் | மோட்டார் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு கேள்விகளைச் | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கும் போது கேள்வியாளர்கள் ரூபா 200,000 பெறுமதியான கேள்விப் பிணை முறியையும் ரூபா 195,600 பெறுமதியான செல்லுபடியாகும் பிணைமுறியையும் சமர்ப்பிக்கவில்லை | கோவைக் கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (iv) | 5.6 பிரிவு | கொள்வனவுப் பெறுமதி ரூபா 28,468,728 ஆகவுள்ள 69 கடவுச்சீட்டு இயந்திரங்களையும் 685 டோனர்களையும் கொள்வனவு செய்தல் சம்பந்தமாக பொருட் கொள்வனவு வழிகாட்டிக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக் கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (உ) | 2016 ஒக்தோபர் 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/38 ஆம் இலக்க சனாதிபதி அலுவலகக் கடிதம் | ராஜதந்திரக் கடவுச் சீட்டுக்களை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள நபர்களது நிரலில் இல்லாத 2 நபர்களுக்கு ராஜதந்திரக் கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. | சனாதிபதி அலுவலக அறிவுறுத்தல் களுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாராளுமன்ற பிரதிச் செயலாளர் மற்றும் பதவியணித் தலைவர் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர் களுக்கு கடவுச்சீட்டை வழங்குவதற்கு அங்கீகாரம் அளிக்கும் கடிதத்தை தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. வணக்கத்திற்குரிய பேராசிரியருக்கு அங்கீகாரம் வழங்கும் கடிதம் தொலைந்துள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 பொறுப்புகளுக்கும் கடப்பாடுகளுக்கும் உட்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் பொருட்டு 2019 ஆம் ஆண்டில் தீர்வு | சகல பொறுப்புகளையும் | பொறுப்புகளுக்கான பதிவேட்டை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட ரூபா 4,392,614 க்கான பொறுப்பானது, கடப்பாடு மற்றும் பொறுப்புகள் தொடர்பான கூற்றில் காட்டப்படவில்லை. | குறித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நாளதுவரையாக்கி மேற்படி குறைபாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தயவுடன் தெரிவிக்கின்றோம். |
| (ஆ) | மீளாய்வாண்டின் 08 செலவின விடயங்கள் தொடர்பான நிகர நிதியேற்பாட்டிலும் கூடுதலாக ரூபா 7,412,221 க்கான பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன. | பொறுப்புகள் உருவாகும்போது 216(6) நிதிப் பிரமாணத்திற்கேற்ப நிதியேற்பாடு உள்ளதா என்பதை கவனிக்க வேண்டும். | நீர், மின்சாரம் என்பவற்றிற்கு 12 மாத மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. சகல சந்தர்ப்பங்களிலும் டிசம்பர் மாத வருகைப் பட்டியல் அடுத்து வரும் ஆண்டிலேயே செலுத்தப்படும். எவ்வாறாயினும், ஆண்டின் போது 12 மாதங்களுக்கான கொடுப்பனவு செய்யப்படுவதால் நிதியேற்பாட்டை மீறவில்லையெனத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். |
| (இ) | ஏற்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் நிதியேற்பாட்டிலும் கூடுதலாக ரூபா 42,101,817 க்கான பொறுப்பு ஏற்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்கள் 94(2) மற்றும் (3) என்பவற்றின் பிரகாரம் பொறுப்புகள் உருவாகும்போது நிதியேற்பாட்டைக் கவனத்திற் கொள்ள வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். உள்ள ஏற்பாட்டுக்கமைய பொறுப்புகள் உருவாகுமாறு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | IBM World Trade Corporation நிறுவனத்துடன் 2018 யூன் 07 ஆந் திகதி ரூபா 1,134,064 பெறுமதியில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாகக் காட்டப்படவில்லை. | சகல கடப்பாடுகளும் பொறுப்புகள் மற்றும் கடப்பாட்டுக் கூற்றில் குறித்துக் கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். உள்ள ஏற்பாட்டுக்கமைய பொறுப்புகள் உருவாகுமாறு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2 முற்பண வழங்கலும் தீர்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | பெறப்பட்ட இடைக்காலக் | 2015 யூலை 14 ஆந் | பதில் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டு நிதி குறித்த பணி முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டுமாயினும், 13 முற்பணம் 16 நாட்கள் முதல் 11 மாத காலதாமதத்துடன் தீர்வு செய்யப்பட்டிருந்தது. | திகதிய 2015/03 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் மூலம், திருத்தஞ் செய்யப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) க்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழங்கப்படவில்லை. |
| (ஆ) | நான்கு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத்தில் செலவிடப்படாது கையிலிருந்த ரூபா 60,264 அவர்கள் வசம் 16 நாட்கள் தொடக்கம் 56 நாட்கள் வரையிருந்தது. | முற்பணம் திட்டமிடப்பட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 2.3 செலவின முகாமைத்தவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவின விடயங்கள் 11 க்கான மொத்த நிதி நிதியேற்பாடு ரூபா 38,048,122 ஆகும். நிதியேற்பாடு கூடுதலாக அமைந்ததால் செலவின விடயங்களிலான சேமிப்பு 7 முதல் 29 சதவீதம் வரையில் அமைந்திருந்தது. | நிதிப்பிரமாணம் 50 குறிப்பிடும் ஏற்பாடுகள் நிறைவேறுமாறு வருடாந்தச் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பீடு செய்யப்பட்ட வாடகைக் கட்டணத் தவணைப் பணத்தில் குறைவு, பயிற்சிகள் அமுலாகாமை, பயணிகள் வெளியேற்ற நடவடிக்கைகளில் உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்தவாறு பயன்படுத்தப்படாமை, வாகன வாடகைக் கொடுப்பனவில் தாமதம் என்பவற்றால் நிதியேற்பாடு சேமிப்புக்குள்ளானது. |
| (ஆ) | நிதியேற்பாடு ரூபா 122,000,000 ஆகவிருந்த 2 செலவின விடயங்களில் எதுவுமே பயன்படுத்தப்படாது அத்தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 குறிப்பிடும் ஏற்பாடுகளுக்கமைய நிறைவேறுமாறு வருடாந்தச் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | உபகரணங்களை வழங்கும் நிறுவனம் அவற்றை வழங்கு முடியாதுள்ளதாக அறிவித்தருந்தமை மற்றும் களுதியவத்தயில் நிர்மாணிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சக்திமயப்படுத்தும் சட்டத்தை வசதிகளுக்கான கட்டிடம் நிர்மாணிக்கப்படுவது |

| | | |
|---|---|---|
| | | இரத்துச் செய்யப்பட்டமை காரணமாக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி சேமிப்புக்குள்ளானது. |

**2.4 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரு நாட்டு பிரஜாவுரிமைக்கான சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு நபர்களால் செலுத்தப்படும் ரூபா 300,000 அந்நபர்களுக்கு வழங்கப்படாது பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது | வருமானம் பிழையின்றிக் கணக்கிலிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரு நாட்டு பிராஜாவுரிமைக்காக விண்ணப்பித்த C19160039060 இலக்கத்திற்குரிய திரு.ஏ.விமலானந்தனால் அவ்விண்ணப்பத்திற்கான கொடுப்பனவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவ்விண்ணப்ப இலக்கத்திற்குத் தவறுதலாக இன்னுமொருவரால் குறித்த கட்டணம் செலுத்தப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. பணத்தைச் செலுத்திய விண்ணப்பதாரருக்கு அலகுக்குரிய சான்றிதழை வழங்குவதற்கு திரு.ஏ.விமலானந்தனிடமிருந்து குறித்த கட்டணம் அறவிடப்பட்டு வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டத்தின் மூலம் 16 பொருட் கொள்வனவுப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 1,060.6 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் 3 பணிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 869.7 மில்லியனாகிய 82 சதவீதத்திற்கான பணிகள் நிறைவேற்றப்படவில்லை. | திட்டமிடப்பட்ட பணிகள் முறையாக நிறைவேறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2018 சனவரி 01 ஆந் திகதியன்று 132 அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்கள் இருந்தன. 2018 ஆம் ஆண்டில் 113 அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதற்கமைய, 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 19 அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் இருக்க வேண்டுமாயினும், 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 55 அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | பிழையற்ற பதவியணியை அறிக்கைகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |
| (ஆ) 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களது எண்ணிக்கை செயலாற்றல் அறிக்கையில், கடவுச்சீட்டுப் பிரிவின் சட்டங்களின் பிரகாரம், ரூபா 603,732 ஆகுமாயினும், அவ்வறிக்கையில் வழங்கப்பட்ட ஒரு நாள் சேவை கடவுச் சீட்டுக்கான சாதாரண சேவையின் கீழ் வேறுபடுத்திக் காட்டுகையில் மொத்த கடவுச்சீட்டுக்களிலும் 7 சதவீதமான 603,725 கடவுச்சீட்டு வித்தியாசம் இருப்பது அவதானிக்கப்பட்டது. | பிழையற்ற தகவல்களைச் செயலாற்றல் அறிக்கையில் உட்புகுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |

**3.3 பொருட் கொள்வனவு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மார்ச் 17 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க தேசிய வரவு, செலவு திட்டச் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மோட்டார் வாகனக் கொள்வனவுக்கு வழங்குநரைத் தெரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் சரிவர வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட | பதில் வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| செய்கையில் தேவையான விதிமுறைகள் பரிசீலிக்கப்பட்டு பொருட் கொள்வனவுக்கான தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. | வேண்டும். | |

### 3.4 நட்டங்களும் இழப்புகளும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) LEXMARK MS 310 டோனரைக் கொள்வனவு செய்கையில் கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட கூறுவிலைக்கும் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட விலைக்கும் இடையே ரூபா 2,397,500 நட்டம் ஏற்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாதவாறு மேற்கொள்வதற்கு தீர்மானம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பிறிதானதொரு கடவுச்சீட்டை வழங்குவது முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எனினும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு வழங்கப்படும் ரூபா 2,580,000 பெறுமதியான வெற்றுக் கடவுச்சீட்டுக்களது 4,000 எண்ணிக்கையான கையிருப்பு களஞ்சியத்தில் இருந்தன. | அரசாங்கத்திற்கு குறைந்தளவு நட்டம் ஏற்படும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (இ) வழங்கப்படாது களஞ்சியத்திலிருந்து ரூபா 7,792,256 பெறுமதியான 8 வகை வெற்றுக் கடவுச்சீட்டுக்கள் ஏறக்குறைய 15 ஆண்டுகளாகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்டிருந்தன. | பயன்படுத்தக் கூடியமையைப் பரிசீலித்து கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஈ) 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களது எண்ணிக்கைக்கு ஒப்பாக பல்வேறு வழுக்களின் காரணமாக ரூபா 2,957,970 பெறுமதியான 4,586 கடவுச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | வழுக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 3.5 கணக்கு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின்போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 4 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட 3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 5,133.04 மில்லியன் ஆகவுமிருந்தது. | சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் குறித்த காலத்தில் பதில் வழங்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 3.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் 5 வழங்கப்படாதும் இரத்துச் செய்யப்படாதுமிருந்தன. இவை தொடர்பாக என்ன நடக்கும் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. | இரத்துச் செய்யப்பட்ட கடவுச்சீட்டுக்கள் தொடர்பான விபரங்களை இரத்துச் செய்து கடவுச்சீட்டு பதிவேட்டில் உட்புகுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வழங்கப்பட்டிராத ஒவ்வொரு இராஜதந்திரக் கடவுச்சீட்டும் நிராகரிக்கப்படுவதற்கான காரணம் கணனி முறைமையின் பிரகாரம் கீழே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இரத்துச் செய்யப்பட்ட சகல இராஜதந்திர கடவுச்சீட்டுக்கும் வேறு கடவுச்சீட்டு விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இரத்துச் செய்யப்பட்ட கடவுச்சீட்டு சட்டபூர்வ விதிமுறைப்படி அழிக்கப்படும் என்பதையும் மேலும் தெரிவிக்கின்றோம். |
| (ஆ) 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க உள்ளக நடவடிக்கைகள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார நடவடிக்கை அமைச்சின் செயலாளரது சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் | செல்லுபடிக் காலம் உறுதி செய்யப்படும் விதத்தில் கணனி முறைமை நாளதுவரையாக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உங்களால் குறிப்பிடப்பட்ட 01/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்குப் பொருந்துமாறு இராஜதந்திர கடவுச்சீட்டு சம்பந்தமானது அல்ல. அது கடவுச்சீட்டு வழங்கப்படுகையில் பொருந்திவரும் கடமையின் பொருட்டான கடவுச்சீட்டு |

| | | |
|---|---|---|
| இராஜதந்திர கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிக்கப்படுகையில் கடவுச்சீட்டுக்குரிய கால எல்லை நிறுவனத் தலைவரால் கடமைக்கான அவசியத்தினடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கணனி முறைமையின் படி, சகல இராஜதந்திர கடவுச்சீட்டுக்களும் 10 ஆண்டு காலம் செல்லுபடியாகுமாறு வழங்கப்பட்டிருந்தது. | | வழங்கல் தொடர்பானதாகும். எவ்வாறாயினும், கடமைக்கான கடவுச்சீட்டு வழங்கப்படுகையில் நிறுவனத் தலைவரது பரிந்துரையிடின்படி / ஓய்வுபெறும் காலம் வரை மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றுவதற்குச் செல்லும் உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு நடவடிக்கைகள் அமைச்சினால் தீர்மானிக்கப்படும் கால எல்லைக்கும் மாத்திரமே இராஜதந்திர கடவுச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பத்தில் கடவுச்சீட்டுக்கள் நான்காம் பக்கத்தில் குறிப்பிடப்படும். |
| (இ) 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயல் முன்னேற்றத்தைப் பரிசிலீத்தபோது 89 பதவிணயனியினருக்காக பயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டபோதும், 2018 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் 58 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | செயலாற்றல் அறிக்கையில் தகவல்களைச் சரிவர உட்புகுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 1203 ஆகும். உள்ளவாறான எண்ணிக்கை 1065 ஆவதால் 138 வெற்றிடங்கள் நிலவின. | தேவைக்கேற்ப பதவியணியினரது வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |